## புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டம் - 2017

புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஏஜென்சி பிரான்செய்சி டி டெவலெப்மென்ட் (ஏஎவ்டி) இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 101104 எல் ஆம் இலக்க ஏஎவ்டி கடன் உடன்படிக்கையின் 11.5 ஆம் பிரிவு மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க திருத்தப்பட்ட ஏஎவ்டி கடன் உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் மின்வலு, வலுசக்தி மற்றும் தொழில்துறை அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. எரிசக்தி மின்சார விநியோக அமைப்பு உறிச்சல் இயலளவை அதிகரித்து சராசரி உற்பத்திக் கிரயங்களை குறைப்பதன் மூலம் தேசிய மின்சார விநியோக அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுதல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,660.10 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 46.40 மில்லியன் (யூரோ 41.10 மில்லியன்) தொகையானதுடன் அதில் ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 33.9 மில்லியன் (யூரோ 30.0 மில்லியன்) தொகை ஏஜென்சி பிரான்செய்சி டி டெவலப்மென்டால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்குப் பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், சிவில் நிர்மாண வேலைகள் 2018 சனவரி 06 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 சனவரி 05 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலிற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும்

நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த

அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் இருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) செயற்திட்ட கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிகூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிகூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 05 இலேயே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பூர்வாங்க ஆய்வு, களஞ்சியங்களின் நிர்மாணம் மற்றும் மண் பரிசோதனை நோக்கங்களிற்காக இலங்கை மின்சார சபையால் செலவிடப்பட்ட ரூபா 67.10 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் மதியுரைக் கட்டணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த அதே நேரம் 2016 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையால் செலவிடப்பட்ட ரூபா 98.3 மில்லியன் தொகையான ஆரம்ப செலவினங்கள் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வுக் காலப்பகுதிக்கான வருடாந்த பாதீடுகளில் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வுக் காலப்பகுதியின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏஎவ்டி | 33.90 | 4,865.90 | 1,306.00 | 5.43 | 820.90 | 5.43 | 820.90 |
| இலங்கை அரசாங்கம் | 12.50 | 1,794.20 | - | - | - | - | - |
| சீஈபீ | - | - | 225.00 | 1.25 | 178.70 | 1.81 | 274.10 |
| **மொத்தம்** | **46.40** | **6,660.10** | **1,531.00** | **6.68** | **999.60** | **7.24** | **1,095.00** |

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

ஆரம்பக் கடன் உடன்படிக்கை 2015 ஒக்தோபர் 02 இல் கைச்சாத்திடப்பட்ட போதிலும் இலங்கை மின்சார சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளில் செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் 01 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. செயற்திட்ட அமுலாக்கல் திட்டங்களின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட மலிபோட நாவலப்பிட்டிய, றாகல மற்றும் வெவல்வத்தையில் உள்ள மின்சார விநியோக உப நிலையங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் தொடர்புபட்ட பரிமாற்றல் வரிசைகள் 2018 சனவரி 06 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 சனவரி 06 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் உரிய மின்சார விநியோக உப நிலையங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் பரிமாற்றல் வரிசைகள் தொடர்பாக மீளாய்வுக் காலப்பகுதியின் இறுதியில் அறிக்கையிடப்பட்ட முக்கியத்துவமான பௌதீக செயன்முன்னேற்றம் காணப்படவில்லை.

### 3.3 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.